# சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு

## எப்படித் திருந்தனும்?

குழந்தைகள் பிறக்கும் போது கள்ளம் கபடம் இல்லாதவர்கள் தான். அவர்கள் வாழும் சூழல், வளரும் குடும்பச் சூழ்நிலை, குறிப்பாகப் பெற்றோர்களால், ஆசிரியர்களால் வளர்க்கப்படும் விதமே அவர்களின் குணாதியங்களாக மாறுவதைக் காண்கிறோம்.

இதற்கு அப்பால் ஒவ்வொரு தம்பதியினரின் பூர்வ ஜென்ம புண்ணியத்துக்கு ஏற்பவே குழந்தைகளும் அமைகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தன் பூர்வ ஜென்ம வாசனைகளின் தொடர்ச்சியைத் தாங்கி அல்லவா அதை அனுபவித்துக் கொள்ள அடுத்த அடுத்த பிறவிகளில் நுழைகின்றான்?

பழங்காலத்தில் வடபாரதத்தில் மிகப்பெரிய ராஜ்யம் விளங்கி வந்தது. அதை ஆண்ட அரசனின் பெயர் **மிருத்து.** அவன் மஹா அயோக்யன், பாவி, செய்யாத குற்றம் இல்லை. அவன் ஆட்சியின் மக்களும் இயற்கையும் வித விதமான கொடுமைகளையும் கஷ்டங்களையும் சந்தித்தனர். அவன் எப்போது ஒழிவான் என்று இறைவனை வேண்டினர் என்றால் பாருங்களேன்! [ஒரு மஹாராஜாவோ அரசியல்வாதியோ மக்களுக்கும் இயற்கைக்கும் என்ன என்ன நன்மைகள் செய்ய வேண்டும் என்று மாணவர்களிடம் டிஸ்கஷன் செய்க, இவர் தன் **SAL ENERGYயை** எப்படிக் குறைத்துக் கொண்டார் என்று யோசிக்க வைக்கவும்]

அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் கர்ப்பத்திலேயே தன் தாயைப் பாடாய்ப் படுத்தி எடுத்தான். அவன் பெயர் **வேனன்.** அவன் கல்வியை ஏனோ தானோ என்று கற்றுக் கொண்டு தான் அனைத்தையும் உணர்ந்த இறைவன், ”அஹன் ப்ரஹ்மஸ்மி!” என்று கூறிக் கொண்டான்.

ஒரு நாள் அவன் பிறந்த நாள் வந்தது. அப்போது அவனை அடுத்த ராஜாவாக்கும் முடிவை மிருத்து அவனுக்கு அறிவித்தான். வேனனுக்கோ ஆட்டம் அடங்கவில்லை! விரைவில் அரசனும் ஆனான். முதல் வேளையாய் அவன் மக்களுக்குச் சொன்னது,

”இனிமேல் நாட்டில் கோயில்கள் திறக்கப்பட வேண்டாம், பூஜை புனஸ்காரங்கள், யாகம், ஹோமம் என எதுவும் வேண்டாம், அவை எல்லாம் இறைவனான என் ஒருவனுக்கே சேரும். எனவே தினமும் அரசபைக்கு வந்து என்னைப் பாருங்கள், ஸ்துதி செய்யுங்கள்!”

இதைத் தவறு என்று எடுத்துக் கூறிய பண்டிதர்கள் தண்டிக்கப் பட்டனர். தானே இறைவன் என்ற மிக்க கர்வத்துடன் அவன் பண்ணிய கொடுமைகளும் சேஷ்டைகளும் ஏராளம்! மக்கள் ,"இவனுக்கு இவன் அப்பனே தேவலாமே!" என்று வருந்தினர். காலம் சென்றது.

வேத முறைப்படி வழிபாடுகளும் காரியங்களும் தான தர்மங்களும் பல காலம் விடுபட்டதால் மழை பெய்வதே நின்று விட்டது. இந்திரன் தன்னைப் பழி வாங்குகிறான் என்று கோபத்துடன் இந்திரனை எதிர்த்து வேனன் ஒரு யாகம் செய்ய முற்பட்டான். பல பண்டிதர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை!

யாகம் தீய எண்ணத்துடன் செய்யப்பட்டதால் பலன் கிடைக்காமல் வேறு பலன் கிடைத்தது. வேனனுக்கு மிக பயங்கர வெப்பு வ்யாதி வந்து இறந்தும் போனான்.

அவனுக்குப் பின் அவன் மகன் பிருது அரசன் ஆனான். அவன் தன் தாத்தாவும் அப்பாவும் போட்ட அட்டகாசங்களைப் பார்த்தவன், மக்களின் கஷ்டத்தை உணர்ந்தவன். தான் கற்ற கல்வி மூலம் பல உண்மைகளை முற்றும் உணர்ந்தவன். எனவே அவன் முடிசூட்டும் தருணத்தில், "என்னால் என் நாடு மகிழ்ச்சியையும் அமைதியையும் வளத்தையும் நிச்சயம் அனுபவிக்கும்!" என்று சங்கல்பம் செய்து கொண்டு, உடனே குரு மூலம் ப்ரம்மாவை வழிபடும் மூல மந்த்ரங்களை உபதேசம் பெற்று, அவற்றைக் கொண்டு ப்ரம்மாவின் அருளையும் பெற்றான். நாட்டை ஒழுங்காக ஆண்டான். மக்கள் மகிழ்ச்சி கொண்டனர், வாழ்த்தினர்!

இந்திரனின் அருள் பெற்றால் தான் மழை கிடைக்கும் என்று குரு சொல்லக் கேட்டு, அவன் பெரிய யாகம் ஒன்றைத் தொடங்கினான். யாகத்தில் போட எவ்வித மூலிகைகளும் இல்லை. காரணம் பல காலம் மழையே இல்லையே! மிக்க வருத்தத்துடன் அவன் கிடைத்தவற்றைக் கொண்டு மிக்க பக்தியுடனும் ஸ்ரத்தையுடனும் யாகம் செய்தான். தன்னால் முடிந்த தட்சிணையை யாகம் செய்தவர்களுக்குக் கொடுத்தான். மழை பெய்யுமா என்ற ஏக்கத்துடனே இருந்தான்.

அப்போது மஹாவிஷ்ணுவின் மனைவியான ஸ்ரீபூமி மாதா அவன் கனவில் ப்ரத்யக்ஷம் ஆனாள். தன் மீது வாழும் மக்களும் ஜீவன்களும் வளமுடன் வாழ பிருது செய்த யாகம் அவள் மனதைக் குளிர்வித்தது. அப்போது அவள் கூறினாள், "மகனே! நான் ஒரு தெய்வீகப் பசுவாகி உன் ஊரிக்குள் திரிவேன். அப்போது நீ இதுவரை செய்த பூஜைகள், நீதி, தர்மம், தானம் இவற்றை எல்லாம் ஒரு கன்றுக்குட்டிக்குள் ஆவாகனம் செய்து என்னிடம் கொண்டு வருக!" என்றாள்.

விடிந்ததும், அவனும் தன் குருவிடம் இதைக் கூறி, ஒரு கன்றுக் குட்டியைப் பிடித்தான், அதற்குள் தன் நல்ல காரியங்கள் அனைத்தையும் த்யானித்து உள்செலுத்தினான். கன்றுக்குட்டி பசுவின் பாலுக்கு ஏங்குவது போல தன் மக்களின் வளமைக்கு ஏங்கி பக்தியுடன் பூமிதேவியைத் தேடி ஊருக்குள் செல்ல, அங்கே ஒரு கோயில் அருகில் பூமிதேவியும் பசுவாய் நிற்க, கன்றுக்குட்டி ஓடிச் சென்று அதன் படியில் முட்டி முட்டிப்பால் குடிக்க, அதன் வயிறும் மனமும் நிறைய, பால் பூமி மீது விழ மழை பெய்யத் தொடங்கியது. [தான் சேர்த்த **SAL ENERGY** இவன் எதற்குச் செலவிடுகிறான் என்று யோசிக்க வைக்கவும்.]

தன் அப்பாவும் தாத்தாவும் செய்த தவறுகளை எண்ணி பூமிமாதாவிடம் மன்னிப்பும் வேண்டினான்.அவனால் நாடு மீண்டும் சுபிக்ஷம் அடைந்தது. எனவே ஒன்று படித்தோ பார்த்துதோ திருந்தனும், அல்லது கேட்டுக் திருந்தனும் அல்லது பட்டுத் திருந்தனும்.திருந்தா விட்டால் உலகமே கஷ்டப்படும் அல்லவா?

பிருதுவினால் மீண்டும் பூமியின் வளம் ஏற்பட்டதால் தான் பூமாதேவி தன்னையே **"ப்ருத்வி"** என்று பெருமையுடன் அழைத்துக் கொண்டாள்!